1989 ஏப்ரல் 26] *[திரு. எஸ். திருநாவுக்கரசு]*

பெருக்கிட இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். தொழிலாளர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து, சி.ஐ.டி.யூ., அதைப்போலவே, அந்தோணிப்பிள்ளை அவர்கள் தலைமையிலே உள்ள தொழிற் சங்கத்தினர் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. நிர்வாகத்தின் சார்பாக இன்று வந்துள்ள தகவலின்படி, அப்படி ஒன்றும் அதிகமாக மெகாவாட் குறைந்துவிடவில்லை. கிட்டத் தட்ட 600 மெகாவாட்டை எட்டியிருக்கிறோம் என்று தகவல் வந்திருந்தாலும், இதிலே நான் வீம்புப் பேச்சுக்கு இடம் கொடுக்க விரும்பவில்லை. அது என்னுடைய இயல்பும் அல்ல என்பது இந்தப் பிரச்சினையை எழுப்பிய நண்பர்கள் அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். நிர்வாகம், போராடிக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுடைய, உண்ணா நோன்பில் ஈடுபட்டு இருக்கின்ற தொழிலாளர்களுடைய உணர்வுகளை மதிக்கின்ற வகையில் இந்த அரசின் சார்பில் நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் வாயிலாகவும், தேவைப்பட்டால் என் மூலமாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இப் பிரச்சினையை எழுப்பியவர்களே, இன்றைக்கு இருக்கின்ற மின் பற்றாக்குறையினால் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள அவதிகளைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அதையும் தொழிலாளர்கள் கவனத்திலே வைத்துக்கொண்டு, மேலும் அவதி ஏற்படுவதற்கு தொழிலாளர்களும் காரணமாக இருந்தார்கள் என்கின்ற பழியைச் சுமக்காமல், என் வேண்டுகோளை ஏற்று உண்ணாநோன்பையும், வேலைநிறுத்தத்தையும் கைவிட்டு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அரசின் சார்பில் நிர்வாகத்தோடு தக்க முறையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மாணவர்கள் வேலை நிறுத்தம் குறித்து

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நோயாளி ஒருவர் கொடுத்த தகவலை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னால் வைக்கவேண்டும் என்பதற்காக நான் எழுந்து நிற்கின்றேன். அனுமதித்ததற்கு நன்றி. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே இன்று 'ஹவுஸ் சர்ஜன்ஸ்' என்று சொல்கிற பயிற்சி டாக்டர்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்கிறார்களாம். அதனாலே

நோயாளிகள் கவனிக்கப்படுவது மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். நான் விவரம் கேட்டபோது, சின்னசாமி என்று சொல்கின்ற ஒரு மாணவருக்கு 'இன்டர்னல் அசெஸ்மென்ட்' என்று சொல்கின்ற குறிப்பினை அனுப்பாத காரணத்தினாலே அவர் திருப்பித் திருப்பி இரண்டு தடவை பரீட்சை எழுதியும், தேர்விலே தோல்வியுற்றிருக்கிறார். அவரே யூனிவர்சிட்டியிலே வந்து பார்த்த போது, 'இன்டர்னல் அசெஸ்மென்ட்' அனுப்பாத அந்தக் குறை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. யாரோ ஒரு எழுத்தர் வேண்டுமானால் அந்தத் தவறைச் செய்திருக்கலாம்; வேண்டுமென்றே செய்ததாக நான் கருதவில்லை. இருந்தாலும் இரண்டு முறை அவர் தோற்றுப் போன காரணத்தால், அவருடைய வாழ்க்கை மிகவும் பாதித்து விட்டது என்று அங்கே வேலை நிறுத்தத்திலே (குறுக்கீடு) ஆமாம், மற்ற சப்ஜெக்ட்ஸிலே எல்லாம் பாஸ் பண்ணியவர்; இதிலே மட்டும் பாஸ் பண்ணாத காரணத்தி னாலே அவருடைய வாழ்க்கையிலே பெரிய பாதிப்பு ஏற்பட்டு விட்டதாகக் கருதி, மற்றவர்கள் வேலைநிறுத்தம் செய் கிறார்கள். வேலைநிறுத்தம் செய்கின்ற காரணத்தினாலே நோயாளிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதனாலே ஏதோ ஒரு வகையிலே அவர்களுக்கு ஒரு ஆறுதல் சொல்கின்ற வகையிலே பதில் கிடைக்குமானால் வேலைநிறுத்தம் நின்று, அந்த மாணவருக்கும் ஆறுதல் கிடைத்து, நோயாளிகளும் பயன் பெறுவார்களே என்பதற்காக இதைச் சொல்கிறேன்

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறியதைக் கவனத்திலே கொள்கிறோம். ஆனால் தங்களிடத்திலே அனுமதி பெற்று அவர்கள் இங்கே அதைக் கூறியிருக்கின்றார்கள். எதற்கு அனுமதி கொடுத்திருக் கிறீர்கள் என்ற விவரமாவது எங்களுக்கு முன்கூட்டித் தெரிந் திருந்தால் அதைப்பற்றி ஏதாவது ஒரு விவரம், ஒரு மின்னல் வேகத் தொலைபேசி மூலமாகவாவது தஞ்சைக்குத் தொடர்பு கொண்டு நாங்கள் பெற்றிருக்க முடியும், கேள்வி நேரத்தின் போது, அதைப் பெற இயலவில்லை. என்ன விவரம் என்று அறிந்து எது நியாயமோ அதைச் செய்வதற்கு இந்த அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வேதாரண்யம் நகரத்தில் காங்கிரஸ் தொண்டரைச் சிலர் கொலை செய்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சா. பீட்டர் ஆல்பேர்ன்ஸ். பி.வி. இரா ஜேந்திரன் ஆகியோர், ''தஞ்சை மாவட்டம் வேதாரண்யம்